செ.வெ.எண்: 652 நாள்: 13.08.2008

எல்லை மறுவரையறை செய்யப்பட்டுள்ள தொகுதிகளின் அடிப்படையிலான வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தும் பணி ஆண்டின் இடையில் தற்பொழுது நடைபெற்று கொண்டிருக்கின்றது. மாற்றியமைக்கப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் 2008-ம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரை வெளியிடப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில், வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க, திருத்தம் செய்ய அல்லது நீக்க 2008 ஆகஸ்ட் மாதம் 20ஆம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

2. மேலும், வாக்காளர் பட்டியல் களப்பணியாளர்கள், 100% கள விசாரணை செய்து வருகின்றனர். இவர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலில் உள்ள விடுபட்ட மற்றும் மிகையான பெயர்களை கண்டறிந்து, அவற்றை வாக்காளர் பட்டியலில் சேர்க்க அல்லது நீக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

3. அரசியல் கட்சிகளும் வாக்காளர் பட்டியலில் விடுபட்ட பெயர்களை சேர்க்க விண்ணப்பங்கள் அளிக்க பிரச்சாரம் செய்யக் கூடும். இப்பணி நியாயமான முறையில் நடக்குமாறு உறுதி செய்துகொள்ள அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதன்மூலம் அப்பகுதியில் "சாதாரணமாக குடியிருப்பவர்" எவரும் விடுபடாமலும், "சாதாரணமாக குடியில்லாதவர்" எவரும் சேர்க்கப்படாமலும் இருக்க உதவும்.

4. வரையறுக்கப்பட்ட அமைவிடங்களில் பொதுமக்கள் தங்கள் விண்ணப்பங்களை அளிப்பதற்கு ஏதுவாக, 2008 ஆகஸ்ட் 17ஆம் தேதி சிறப்பு முகாம் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. (ஆகஸ்ட் மாதம் 2ஆம் மற்றும் 3ஆம் தேதிகளில் முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு முகாம்களுக்கு போதிய வரவேற்பு கிடைக்கவில்லை.)

5. மேலும் ஆகஸ்ட் 15ஆம் தேதி அன்று சிறப்பு கிராம சபை கூட்டங்களில் வாக்காளர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட உள்ளது. பட்டியலில் விடுபட்டுள்ள நபர்களின் பெயர்களை, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரி / உதவி வாக்காளர் பதிவு அதிகாரி / வாக்காளர் பட்டியல் களப்பணியாளரிடம் கிராம சபை கொடுக்கலாம்.

6. வாக்குச் சாவடி பட்டியல் மற்றும் வாக்காளர் பட்டியல் http://www.elections.tn.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

5. பொதுமக்கள் வசதிக்காக மின்னணு பதிவு வசதியும் http://www.elections.tn.gov.in/eregistration என்ற இணையதளத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நரேஷ் குப்தா 13/8/08

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி

தமிழ்நாடு

வெளியீடு, இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.